*7*

# அற்புதங்களும் பரிசுத்த ஆவியானவரும்

*"முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங் களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து, நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்?" (எபி. 2:3, 4).*

*அற்புதங்கள் என்பவை பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தில் முக்கியமான பகுதியாக உள்ளன. பிதாவானவர், பரிசுத்த ஆவியானவர் மூலமாக அற்புதங்களை நிகழ்த்துவதற்கு அவரை ஒரு முகவராக பயன்படுத்தினார் (எபி. 2:3, 4). பேசிய மனிதர்கள் தேவனுடைய மனிதர்களாக இருந்தனர் என்பதை ஆவியானவரின் அற்புதமான செயல்களின் மூலமாக, தேவனே சாட்சிகொடுத்தார் (மாற். 16:20). இவ்விதமாக, ஆவியானவர் மூலமாக அவர் [தேவன்] தமது வசனத்தை முன்னிறுத்தி, உறுதிப்படுத்தி, பாதுகாத்தார்.*

## அற்புதங்கள் மீண்டும் நிகழ்த்தப்படமாட்டாது

*தேவன் அற்புதமான செயலின் மூலமாக நிரூபித்துள்ள ஒரு விஷயத்தை, அற்புதத்தை மீண்டும் நிகழ்த்துவதன் மூலமாக அவர் திரும்பவும் நிரூபிக்க அவசியமில்லை. படைப்பின் மூலம் தேவன் தமது இருத்தல் மற்றும் இயல்பு ஆகியவற்றிற்கான ஆதாரத்தை எல்லாக் காலத்திற்கும் ஒரே தரமாக முன்நிறுத்தினார் (ரோமர் 1:20). விண்மீன்கள் உள்ள ஆகாயத்தின் விரிவில் (சங். 19:1), தேவன் தமது வல்லமையின் மாட்சிமையையும், நமது கிரகத்தில் உள்ள எண்ண இயலாத எண்ணிக்கை கொண்ட உயிரினங்களின் வடிவத்தில் தமது படைப்பாக்கத்தின் மேதைத் தன்மையையும் காட்சிப்படுத்தினார். படைப்பின் நாள் முதற்கொண்டு, அவர் படைத்தவற்றில் தேவனுடைய வல்லமையையும் இயல்பையும் நிரூபிக்கத் தேவையான யாவும் அடங்கியுள்ளன.*

*மனித வரலாற்றின் தொடக்கத்தில், பல தெய்வ மதங்கள், பல தேவர்களை உண்டாக்கி, ஒரே தேவன் இருக்கின்றார் என்பதற்கும், அந்த*

*ஒரே தேவன் யார் என்பதற்கும் நிரூபணத்திற்கான தேவையை உண்டாக்கிவிட்டனர். பொய்யான தேவர்கள் நிறைந்திருந்த எகிப்து நாட்டில் தேவன் தம்மையே நிரூபிக்கத் தேர்ந்துகொண்டார். தேவர்களின் பெருக்கத்தால் மொய்க்கப்பட்டிருந்த ஒரு காட்சியமைவில், எகிப்து நாட்டின் பார்வோன், "நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்?" என்று கேட்டான் (யாத். 5:2அ). இதற்குப் பதில்செயலாகத் தேவன், அற்புதமான செயல்களின் மூலம் எகிப்திய தேவர்களுக்கு மேலாக, தமது மாட்சிமையையும் மகிமையையும் காட்சிப்படுத்தினார். அவர், தாம் ஒருவரே தேவனாயிருக்கின்றார் என்பதை செயல்விளக்கப்படுத்தினார். அவர், "... எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன். நானே கர்த்தர்" என்று உரைத்தார் (யாத். 12:12). தேவன் இஸ்ரவேலர்களை எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்ததில், அவருடைய அற்புதங்களைப் பற்றி மோசேயின் மாமனாகிய எத்திரோ, சரியான முடிவைத் தரவழைத்தார். அவர், "கர்த்தர் எல்லாத் தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன். அவர்கள் இடும்பு செய்த காரியத்தில் அவர்களை மேற்கொண்டார்" என்று கூறினார் (யாத். 18:11).*

*தேவன் தாம் ஒருவரே தேவனாயிருக்கின்றார் என்பதைத் தொடர்ந்து வந்த ஒவ்வொரு தலைமுறைக்கும் நிரூபிப்பது அவசியமாயிருக்கவில்லை. அவர் மோசேயிடத்தில், "நான் எகிப்திலே நடப்பித்ததையும் நான் அவர்களுக்குள் செய்த என் அடையாளங்களையும், நீ உன் பிள்ளைகளின் செவிகள் கேட்கவும், உன் பிள்ளைகளுடைய பிள்ளைகளின் செவிகள் கேட்கவும் விவரித்துச் சொல்லும்படிக்கும், நானே கர்த்தர் என்பதை நீங்கள் அறியும்படிக்கும்" எகிப்தில் அடையாளங்களை நிகழ்த்தவிருப்பதாகக் கூறினார் (யாத். 10:2). எகிப்தியத் தேவர்களுக்கு மேலாக, தமக்கு வல்லமை உண்டு என்று இஸ்ரவேலின் பிள்ளைகளுக்கும் அவர்களின் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் காண்பிப்பதற்காகத் தேவன் எகிப்தில் நிகழ்த்திய அற்புதங்களை திரும்பவும் செய்ய மாட்டார். இந்த அடையாளங்களைக் கண்களினால் கண்ட சந்ததியார், தங்களுக்குப் பின்வரும் சந்ததிகள், தேவன் ஒருவரே உண்மையான தேவனாக இருக்கின்றார் என்று ஏற்றுக்கொள்ளக் கூடும்படிக்கு அவற்றை இவர்களுக்குக் கூறவேண்டியதாயிருந்தது.*

*பல ஆண்டுகளுக்குப் பின்பாக, கிதியோன் "கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? ..." என்று கேட்டார் (நியா. 6:13). அவரது கேள்வியானது, (1) எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்தது போன்ற அற்புதங்கள் இனியும் நிகழ்த்தப்படவில்லை மற்றும் (2) பிந்திய தலைமுறையினருக்கு அந்த அற்புதங்களைப் பற்றிக் கூறப்பட்டிருந்தது என்பவற்றிற்கு ஆதாரமாயிருந்தது.*

*அதுபோலவே, இயேசு அற்புதங்கள் நிகழ்த்தியதைக் கண்டவர்கள், எதிர்கால சந்ததியார் விசுவாசிக்கும்பொருட்டு அவற்றைப் பதிவுசெய்து*

*வைத்துள்ளனர் (யோவா. 20:30, 31). எழுதப்பட்ட வார்த்தைகளின் மூலமாக நாம், அவரது வாழ்வு, அற்புதங்கள், மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை அறிகின்றோம். இந்த நிகழ்ச்சிகள் மறுபடியும் செய்யப்பட மாட்டாது.*

## அற்புதங்கள் திட்டவட்டமான நோக்கம் கொண்டிருந்தன

*இயேசு மக்கள்மீது பரிவிரக்கம் கொண்டதினால், சில வேளைகளில் அற்புதங்களை செய்தார் (மத். 9:36; 14:14; 15:32; 20:34). இருப்பினும், படைப்பு தொடங்கி, ஒவ்வொரு அற்புதமும் தனக்குப் பின்னால் ஒரே மாதிரியான முக்கிய நோக்கத்தையை கொண்டிருந்தது.*

*1. தேவன் இருத்தலை நிரூபித்தல் என்பதே படைப்பின் பெருஞ் சிறப்பான நோக்கமாக இருந்தது (ரோமர் 1:20).*

*2. அற்புதங்கள் மூலமாக தேவன், தாம் ஒருவரே உண்மையான தேவன் - எகிப்தியரின் தேவர்களுக்கும் மேலானவர் (யாத். 10:2) மற்றும் கானானியரின் தேவர்களுக்கும் (1 இரா. 18:36-39) மேற்பட்ட தேவன் - என்பதைக் காண்பித்தார்.*

*3. இயேசு தேவகுமாரனாக இருக்கின்றார் என்பதைத் தேவன், பலத்த செய்கைகள், அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் ஆகியவற்றின் மூலம் நிரூபித்தார் (யோவா. 20:30, 31; அப். 2:22).*

*4. தேவன் தமது அங்கீகாரம் பெற்ற பேச்சாளர்களாகக் குறிப்பிட்ட சில மனிதர்களை ''அதிசயங்கள், அற்புதங்கள், வல்லமைகள்'' ஆகியவற்றினால் அடையாளப்படுத்தினார் (2 கொரி. 12:12).*

*5. தேவன் தமது வசனத்தை, தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் மூலமாக வெளிப்படுத்தத் தமது தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தினார் (எபே. 3:3-5; 2 தீமோ. 3:16; 1 பேது. 1:10-12; 2 பேது. 1:20, 21).*

*6. வசனமானது, தேவனுக்காகப் பேசியவர்களுக்கு அற்புத விதமாய்க் கொடுக்கப்பட்டதுடன், அது பலத்த செய்கைகள், அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டது (மாற். 16:20; அப். 14:3; எபி. 2:2-4).*

*7. தேவன் அற்புத அடையாளங்களின் மூலமாகத் தமது சித்தத்தை உறுதிப்படுத்தினார். உதாரணமாக, புறஜாதியாருக்கு இரட்சிப்பின் கதவை அவர் திறந்ததை உறுதிப்படுத்த, அவர் ஒரு அடையாளத்தைப் பயன்படுத்தினார் (அப். 10:47; 11:17; 15:7-9). அடையாளங்கள் என்பவை, சமாரியர்களின் (அப். 8:14-19) - இவர்கள், யூத மக்களால் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படாத மக்களாய் இருந்தனர் (யோவா. 4:9) - மனமாற்றத்தை அங்கீகரித்தலையும், யோவானால் மனமாற்றப் பட்டிருந்தவர்களின் மறு ஞானஸ்நானத்தை (அப். 19:1-6) அவர் ஏற்றுக் கொண்டதையும் காண்பித்தன.*

# பொய்யான அடையாளங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன

*கள்ளப் போதகர்கள், மக்கள் நம்பி இணங்கக் கூடிய அடையாளங் களையும் அற்புதங்களையும் நிகழ்த்தக்கூடியவர்களாய் இருக்கலாம். இந்த சத்தியத்தை, மோசே (உபா. 13:1-3), இயேசு (மத். 24:24), பவுல் (2 கொரி. 11:13-15; 2 தெச. 2:8-10) மற்றும் யோவான் (வெளி. 13:13, 14; 16:14) ஆகிய அனைவரும் போதித்தனர்.*

*போதகர்கள் தேவனுடைய உண்மையான போதகர்களாய் இருக்கின்றனரா இல்லையா என்பதை நாம் தீர்மானிப்பதற்கு, அந்த போதகர்கள் கூறுவதை நாம் நியாயந்தீர்க்க வேண்டும். ஒரு தீர்க்கதரிசியின் கனியாகிய அவரது போதனையே (மத். 7:15-20), நாம் உண்மையான தீர்க்கதரிசி மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி ஆகியோருக்கிடையில் வித்தியாசப் படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. தேவன் தமது மக்களுக்குப் பின்வருமாறு அறிவுறுத்தினார்:*

> *"உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும், சொப்பனக்காரனாகிலும் எழும்பி: 'நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவிப்போம் வாருங்கள்' என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப்பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும், ... அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர் களாக, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர் களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார். நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொள்வீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியும், அந்தச் சொப்பனக்காரனும் கொலை செய்யப்படக்கடவன், ..." (உபா. 13:1-5).*

*தேவன் தமது மக்கள், ஒரு போதகர் கூறுபவற்றினால் அந்த போதகரைச் சோதித்தறியும்படி எதிர்பார்க்கின்றார் (1 யோவா. 4:1, 6). தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை வேதாகமத்தில் காணப்படு கிறபடி போதிக்காத எவரும், அடையாளங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்தினாலும்கூட, அவர் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியாகவே இருக்கின்றார்.*

*பார்வோனின் மந்திரவாதிகள் "தங்களின் இரகசியக் கலைகளின்" மூலமாகத் தங்கள் தடிகளைப் பாம்புகளாக மாற்றி (யாத். 7:11). தண்ணீரை இரத்தமாக மாற்றி (யாத். 7:20, 22), மற்றும் தவளைகளை உண்டாக்கி (யாத். 8:6, 7), மோசேயின் அற்புதங்களைப் போலச் செய்த செயல்களினால், பார்வோன் தவறாக வழிநடத்தப்பட்டான். இருப்பினும் அற்புதங்களாகக் காணப்பட்ட இந்தச் செயல்கள், பார்வோனின் மந்திரவாதிகள் தேவனிடமிருந்து வந்தவர்கள் என்று நிரூபிக்கவில்லை. இது போலவே,*

*தற்காலத்தில் அற்புதங்கள் செய்பவர்களினால் நிகழ்த்தப்படும், வழக்கத்திற்கு மாறான செயல்களாகக் காணப்படுபவை, அவர்கள் மூலமாகத் தேவன் கிரியை செய்கின்றார் என்று நிரூபிப்பதில்லை.*

*இப்படிப்பட்ட வஞ்சனையான செயல்முறைகளின் ஆதாரமூலம் எது என்பது பற்றி நாம் நிச்சயமற்றவர்களாக இருக்கலாம். அவைகள் சாத்தானிடமிருந்து வந்த பொய்யான அற்புத வல்லமைகளாக (2 தெச. 2:9), சாத்தானால் தூண்டப்பட்ட மனிதர்களின் வஞ்சனையான வேலைகளாக (2 கொரி.11:13-15), தேவனால் அனுமதிக்கப்பட்ட கொடிய வஞ்சகமாக (2 தெச. 2:11, 12) அல்லது அசுத்த ஆவிகளால் நிகழ்த்தப்படுகிற அடையாளங்களாக (வெளி. 16:14) இருக்கின்றனவா? இன்றைய நாட்களில் தேவன் சாத்தானுக்கு இப்படிப்பட்ட வல்லமையை அனுமதிக்கின்றாரா? யோபுவை சாத்தான் உபத்திரவப்படுத்துவதற்குத் தேவன் அனுமதித்தார் (யோபு 1:12; 2:6) என்பதையும், ஒரு அசுத்த ஆவியானது இளைஞன் ஒருவனுக்கு அவனைக் கட்டி வைத்த சங்கிலிகளையும் விலங்குகளையும் உடைத்துப் போடுவதற்கு வல்லமை அளித்தது (மாற். 5:2-4) என்பதையும் நாம் அறிகின்றோம். இருப்பினும், தேவனிடத்திலிருந்து வந்த உண்மையான அற்புதங்களுக்கு இணையான ஏதொன்றையும் சாத்தானால் ஒருபோதும் நிறைவேற்றியிருக்க முடிந்ததில்லை. இயேசுவின் ஊழியத்தின்போது சாத்தான் அல்லது அசுத்த ஆவிகளால் வெளிக்காண்பிக்கப்பட்ட, வழக்கத்திற்கு மாறான வல்லமைகள், இன்றைய நாட்களில் சாத்தான் அற்புத வல்லமையைக் கொண்டுள்ளான் என்று நிரூபிப்பதில்லை. வேதாகமத்தை எழுதியவர்கள் தேவனிடத்திலிருந்து வந்தவர்களாய் இருந்தனர், அவர்கள் எழுதியவற்றின் மூலமாக நாம், உண்மைப் போதகர் யார் மற்றும் கள்ளப்போதகர் யார் என்று தீர்மானிக்க முடியும் என்பதை நிச்சயமாய் அறியக்கூடும் (1 யோவா. 4:6).*

## அற்புதங்கள் என்பவை தெய்வீக ஆதாரமூலத்தைக் கொண்டிருந்தன

*அற்புதங்கள் எனப்படுபவை, ஒருவர் கொண்டிருந்த விசுவாசத்தினால் மாத்திரமேயன்றி, தேவனுடைய வல்லமையின் மூலமாக நிகழ்த்தப் பட்டன. தம்மையே வெறுமையாக்கி இயேசு (பிலி. 2:6, 7), தாம் அபிஷேகம் செய்விக்கப்பட்ட (மத். 12:28; லூக். 4:18; அப். 10:38) பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் அற்புதங்களை நிகழ்த்தினார். அவர் தமது சொந்த ஊழியத்தின்போது, எழுபது சீஷர்களுக்கும் (லூக். 10:9, 17), அப்போஸ்தலர்களுக்கும் (மத். 10:1), ஒருவேளை அவர்களுக்குள் இருந்த பரிசுத்த ஆவியானவரின் மூலமாக (யோவா. 14:17), சில அற்புத வல்லமைகளைக் கொடுத்தார். பிற்பாடு அவர்கள் பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம் பெற்று ஆவியானவர் அவர்களுக்குள் நிரப்பப்பட்டபோது (அப். 1:2-5; 2:4), அவர்கள் இன்னும் அதிக வல்லமையினால் நிரப்பப்பட்டனர். பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியான வருடைய வருகைக்குப் பின்பு ஒரு குறிப்பிட்ட காலகட்டம்*

*வரைக்கும் அப்போஸ்தலர்கள் மாத்திரமே அற்புதங்களை நிகழ்த்தியதாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது தனிச்சிறப்புடையதாகக் காணப்படுகிறது (அப். 2:43; 4:33; 5:12). மற்றவர்கள் தங்கள்மீது அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து ஜெபிப்பதற்கு முன்பாக அற்புதங்களை நிகழ்த்தத் தொடங்கவில்லை, இது ஸ்தேவான், பிலிப்பு ஆகியோரின் விஷயத்திலும் உண்மையாயிருந்தது (அப். 6:5, 6, 8; 8:6).*

*அப்போஸ்தலர்களின் சீஷத்துவத்தின் தொடக்கத்தில் - அசுத்த ஆவிகளைத் துரத்தவும் (மத். 10:1, 8; மாற். 3:14, 15), பிசாசுகளையும்கூட துரத்தவும் (மாற். 6:13) அவர்களுக்கு வல்லமை அளிக்கப்பட்டிருந்த போதிலும் - அவர்கள், அசுத்த ஆவிபிடித்திருந்த ஒருவனைக் குணமாக்கக் கூடாது போயிருந்தது. இது ஆவிகளைத் துரத்தும் அதிகாரத்தில் குறைவு ஏற்பட்டதினால் அல்ல, ஆனால் அவர்களின் விசுவாசத்திலிருந்த குறைவினால்தான் இவ்வாறு நடந்தது (மத். 17:20). விசுவாசக்குறைவு என்பது தகப்பன் அல்லது அசுத்த ஆவி பிடித்த அவனுடைய மகனின் பகுதியில் அல்ல, ஆனால் அப்போஸ்தலர்களின் பகுதியிலேயே இருந்தது.*

*ஒரு அற்புதத்தை நிகழ்த்துவதற்கு முதலில் வல்லமை கொடுக்கப்பட வேண்டியதாக இருந்தது. பின்பு, கொடுக்கப்பட்ட வல்லமையைச் செயல்படுத்துவதற்கு விசுவாசம் அவசியமாயிருந்தது. இயேசு பேதுருவுக்குத் தண்ணீரின்மேல் நடப்பதற்கான வல்லமையை அளித்தார், ஆனால் பேதுரு - தமக்கு வல்லமை கொடுக்கப்படாதிருந்தது என்பதால் அல்ல, ஆனால் தமது விசுவாசம் தவறியதாலேயே - தவறிப்போனார் (மத். 14:28-31).*

*பரிசுத்த ஆவியானவர் மூலமாக, தேவனால் அற்புதங்கள் அளிக்கப்பட்டன (1 கொரி. 12:4-6). அவைகள் மனித சித்தம் அல்லது விசுவாசத்தினால் மாத்திரமல்ல, ஆனால் ஆவியானவரின் கிரியையினால் பெற்றுக்கொள்ளப்பட்டன. நமக்கு, "இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" என்று கூறப்பட்டுள்ளது (1 கொரி. 12:11; எபி. 2:4ஐயும் காணவும்). ஒரு கிறிஸ்தவருக்கு அருளப்பட்ட அற்புத வரத்தின் வகையானது அந்த வரத்தைப் பெற்றுக்கொண்ட தனிநபரின் விருப்பத்தின் படியல்ல ஆனால் பரிசுத்த ஆவியானவரின் சித்தத்தின்படியே அருளப் பட்டது.*

*அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளைப் பிறர்மீது வைப்பதன்மூலம் அவர்களுக்கு ஆவியானவரை அருளி, அற்புத வரங்களை அவர்களுக்கு அளித்துச் சிறப்பிக்கும் வல்லமை பெற்றிருந்தனர் (அப். 19:6; 2 தீமோ. 1:6). ஆவியானவரைப் பிறருக்கு அளித்துச் சிறப்பிக்கும் திறமை என்பது அவர்களின் அப்போஸ்தலிக்க அடையாளமாக இருந்தது (2 கொரி. 12:12). அப்போஸ்தலர்களின் மூலமாக வல்லமை பெற்றிருந்தவர்கள் தங்கள் கைகளைப் பிறர்மீது வைத்து அற்புத வரங்களை அளிக்கும் திறன் கொண்டிருந்தனர் என்பதற்கு நாம் ஆதாரம் எதையும் பெற்றிருப்பதில்லை.*

*அற்புதங்கள் நிகழ்த்தக் கூடியவராயிருந்த பிலிப்பு இருந்த போதிலும்கூட (அப். 8:6), சமாரியாவில் பரிசுத்த ஆவியானவரை*

அருளுவதற்கு அப்போஸ்தலர்கள் - பேதுருவும் யோவானும் - தேவைப்பட்டனர் (அப். 8:14-19). அப்போஸ்தலர்கள் அற்புத வரங்களைப் பிறருக்கு அளித்துச் சிறப்பிக்கும் விசேஷித்த வல்லமையை அவர்களுக்குத் தேவன் கொடுத்திருந்தார்.

J. W. மெக்கார்வீ அவர்கள், சமாரியாவில் பேதுரு மற்றும் யோவான் ஆகியோரின் ஊழியத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்,

> சீஷர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்துதல் அல்லது பிலிப்புவின் ஊழியப் பணிகளில் அவருக்கு உதவுதல் போன்ற வேறு எந்த நோக்கமும் இவ்விரண்டு அப்போஸ்தலர்களையும் இந்த ஊழியத்திற்குத் தூண்டியிருந்தாலும், பரிசுத்த ஆவியானவரை அளித்துச் சிறப்பித்தல் என்பதே பிரதான நோக்கமாக இருந்தது என்பது மிகவும் உறுதியாயிருக்கிறது. அவர்கள் அங்கு வந்த சேர்ந்தபோது, அவர்கள் செய்த செயலுக்காகவே அவர்கள் அங்கு சென்றனர் என்பது உறுதி: ஆனால் பரிசுத்த ஆவியானவரை அளித்து சிறப்பித்தல் என்பது அவர்கள் செய்த பிரதான விஷயமாக இருந்தது; ஆகையால் இது அவர்கள் அங்கு வந்ததற்கான முதன்மை நோக்கமாயிருந்தது. ஆயினும், பிலிப்புவினால் இந்த வரத்தை அளித்துச் சிறப்பிக்க முடிந்திருக்கும் என்றால், இந்த ஊழியப் பயணத்தின் முதன்மை நோக்கத்தைப் பொறுத்தவரையில் இந்த ஊழியம் பயனற்றதாகியிருக்கும். இது, பரிசுத்த ஆவியானவரின் வரம், பிற மனிதக் கரங்களினால் அல்ல ஆனால் அப்போஸ்தலர்களின் கரங்களினால் பொழியப்பட்டது என்பதற்குப் பலத்த சாட்சியத்தை அளிக்கிறது; மற்றும் இந்த முடிவானது, இதுபோன்ற வகைப் பட்டதாக, அப். நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இன்னும் ஒரே ஒரு நிகழ்ச்சியான, எபேசுவில் இருந்த பன்னிருவருக்கு (19:1-7) அப்போஸ்தலர்களின் கரங்களினால் வரங்கள் பொழியப் பட்ட நிகழ்ச்சியால் உறுதிப்படுத்தப்படுகிறது.[1]

கொரிந்து நகரில் இருந்த சபை எந்த வரத்திலும் குறைவுபட்டு இருந்ததில்லை (1 கொரி. 1:7), இது பவுல் ஒரு அப்போஸ்தலராயிருந்தார் என்பதற்கு நிரூபணமாகப் பயன்படுத்தப்பட்ட உண்மையாக இருந்தது. அவர்களுக்குப் பவுல், "... கர்த்தருக்குள் நீங்கள் என் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையாயிருக்கிறீர்களே" என்று எழுதினார். (1 கொரி. 9:2). இந்த வரங்கள் விசுவாசத்தின் மூலம் மாத்திரமோ அல்லது அப்போஸ்தலர்களின் கரங்கள் வைக்கப்படுதல் தவிர வேறு எந்த வழிமுறையிலோ கிடைத்திருந்தால், கொரிந்துவில் இருந்த சபை பவுலினால் அவரது அப்போஸ்தலத்துவத்திற்கு நிரூபணமாகச் சுட்டிக்காண்பிக்கப் பட்டிராது. கொரிந்து சபைக்கு வேறு எந்த அப்போஸ்தலரும் சென்றிருந்த தில்லை என்றால், பவுல் ஒரு அப்போஸ்தலராயிருந்திருக்க வேண்டும், ஏனெனில் அவர்களுக்கு அற்புத வரங்களைக் கொடுப்பதற்கு அவர் மாத்திரமே இருந்திருந்தார். இது உண்மையாக இருந்த காரணத்தால், கொரிந்து சபையில் இருந்த வரங்கள் அவரது அப்போஸ்தலத்துவத்திற்கு நிரூபணமாக இருந்தன.

ஒரு அப்போஸ்தலர் இல்லாதிருக்கையில் அற்புத வரங்கள் தேவனால் நேரடியாக அருளப்பட்டிருந்தன என்றால், பேதுருவும் யோவானும் சமாரியாவுக்குச் சென்றிருக்கவோ அல்லது ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய வரங்களை அளிப்பதற்குப் பவுல் அங்கு சென்றிருக்கவோ (ரோமர் 1:11) தேவை ஏற்பட்டிருக்காது. தேவன் இவ்வாறு கிரியை செய்திருந்தால், அவர் ஒரு அப்போஸ்தலர் அங்கு இல்லாமலேயே இதைச் செய்திருக்க முடியும். இந்த விதிக்குக் கொர்நேலியு வீட்டார் மாத்திரமே ஒரே விதிவிலக்காக உள்ளனர்.[2]

(அப்போஸ்தலர்களின் நாட்களில்) அந்த வேளையிலிருந்து, அற்புதங்கள், பலத்த செய்கைகள் மற்றும் அடையாளங்கள் ஆகியவை ஒழிந்து போயின. இப்படிப்பட்ட வரங்களை அளித்துச் சிறப்பிக்க இன்று எந்த அப்போஸ்தலரும் உயிருடன் இல்லை. இன்றைய நாட்களில் அற்புத ஊழியம் செய்வதாக உரிமைகோரிக் கொள்பவர்கள், தண்ணீரில் நடத்தல், கொந்தளிக்கும் கடலை அமர்த்துதல், மரித்தோரை உயிரோடெழுப்புதல், திரளான கூட்டத்திற்கு உணவளிக்கும்படி சிறிதளவு உணவைப் பெருக்கம் அடையச் செய்தல் ஆகியவற்றைச் செய்யக்கூடுமென்றால், இந்தத் திறமைகளை அவர்கள் அவ்வப்போது திரும்பத் திரும்பச் செயல்விளக்கப் படுத்துவார்கள். அவர்கள் புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ளது போல் அற்புதங்கள் நிகழ்த்த இயலாதவர்களாக உள்ளனர்.

## குறிப்பிட்ட விசுவாசிகளாலேயே அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன

மாற்கு 16:17, 18ல் இயேசு, ''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்: நவமான பாஷைகளைப் பேசுவார்கள். சர்ப்பங்களை எடுப்பார்கள்: சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது: வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்'' என்று உரைத்தார். இந்த வசனப்பகுதி யானது பின்வரும் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதில்லை: (1) எல்லா விசுவாசிகளாலும், பிசாசுகளைத் துரத்தவும், நவமான பாஷைகளைப் பேசவும், சர்ப்பங்களை எடுக்கவும், சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாதிருக்கவும். வியாதியஸ்தர் மேல் கைகளை வைத்து அவர்களை சொஸ்தப்படுத்தவும் முடியுமா? (2) இந்த வரங்கள் குறிப்பிட்ட சில விசுவாசிகளுக்கு மாத்திரம் வரையறை செய்யப்பட்டிருக்குமா? (3) இந்தச் செயல்களை நிகழ்த்துபவர்கள் எந்த அடிப்படையில் இவற்றைச் செய்யக்கூடிவர்களாக இருப்பார்கள்? (4) இந்த அடையாளங்கள் எவ்வளவு காலத்திற்கு இருக்கும்? (5) இந்த அடையாளங்களின் நோக்கம் என்னவாக உள்ளது?

பவுலின் உரைக்கப்பட்ட ஒரு கூற்று, எல்லா விசுவாசிகளும் இந்த வரங்களைக் கொண்டிருந்ததில்லை என்பதற்குச் சான்றளிக்கிறது (1 கொரி. 12:7-11, 27-31). அவர் சாமர்த்தியமாக, "எல்லாரும் அப்போஸ்தலர்களா?

*எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?" என்று கேட்டார். குறிப்பிட்ட சில விசுவாசிகள் மட்டுமே அற்புத வரங்களைக் கொண்டிருந்தனர், மற்றும் அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வரத்தைக் கொண்டிருந்தனர்.*

*அற்புத வரங்களைப் பெற்றிருந்தவர்கள், தாங்கள் விசுவாசிகளாய் இருந்ததால் மாத்திரம் அல்ல, ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் வல்லமையளிக்கப்பட்டிருந்ததால் அந்த வரங்களைப் பெற்றிருந்தனர் (1 கொரி. 12:11). அவர்கள் பெற்றிருந்த அற்புத வரங்கள், அவர்கள் மீது அப்போஸ்தலர்களின் கரங்கள் வைக்கப்பட்டதன் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டதாக இருந்தது (அப்.8:14-17; 19:6). இந்தக் காரணத்தினால், அப்போஸ்தலர்கள் இருந்தபோது மாத்திரமே அற்புத வரங்கள் அளிக்கப்பட்டன (ரோம. 1:11ஐக் கவனிக்கவும்). அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்கள் மீது சபையின் அஸ்திபாரம் இடப்பட்டிருந்ததால் (எபே. 2:20), அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியங்களை உறுதிப்படுத்தும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக (மாற். 16:20; அப். 14:2; எபி. 2:3, 4) இருந்தனர்.*

*மெக்கார்வீ அவர்கள், மாற்கு. 16:17, 18ஐப் பற்றிப் பின்வருமாறு சரியாக உரைத்தார்:*

> *இந்த அடையாளங்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தொடரும் என்றோ அல்லது இவைகள் ஒவ்வொரு விசுவாசிக்கும் அருளப்படும், என்றோ அல்ல; ஆனால் ஒரு சரீரம் என்ற வகையில் விசுவாசிகளைத் தொடரும். இவைகள் அப்போஸ்தலர்களின் காலத்தின்போது விசுவாசிகளிடத்தில் இருந்தன- ஆனால் ஒவ்வொரு தனித்தனி விசுவாசியிடமுமல்ல, ஆனால் ஏறக்குறைய, விசுவாசிகளின் ஒருங்கமைக்கப்பட்ட எல்லாக் குழுக்களிலும் இருந்தன. இது வாக்குத்தத்தம் செய்யப்பட்டதின் முழுமையான நிறைவேற்றமாக இருந்தது.*[3]

## இயேசுவின் நாமத்தினால் அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன

*இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய இரவில், அவர் தமது அப்போஸ்தலர்களிடத்தில், "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று கூறினார் (யோவா. 14:14). இதிலிருந்து சிலர், நாம் இயேசுவின் நாமத்தினாலே கேட்டால் ஒரு அற்புதம் நடைபெறும் என்று முடிவு செய்துள்ளனர். இருப்பினும் இது, அந்த வேளையில் இயேசுவுடன் இருந்த அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் உரைக்கப்பட்டது (மத். 26:20; லூக். 22:14). அப்.நட. புத்தகத்தில், ஒரு நபரிடத்தில் இருந்த அசுத்த ஆவியை இயேசுவின் நாமத்தில் வெளியேறும்படி கேட்டுக்கொண்ட மனிதர்களைப் பற்றிக் கூறுகிறது. அந்த*

*அசுத்த ஆவி, "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார்" (அப். 19:13-15) என்று பதிலளித்தது. இயேசு பவுலுக்கு வல்லமை அளித்திருந்தார், ஆனால் ஸ்கேவாவின் மகன்களுக்கு அதை அவர் அளித்திருக்கவில்லை. இதை இந்த அசுத்த ஆவி புரிந்துகொண்டிருந்தது மற்றும் தனக்குக் கட்டளையிட்டவர்கள் அங்கீகரிக்கப்படாதிருந்ததால் அவர்களுக்கு அது கீழ்ப்படியவில்லை.*

*இயேசு தம்மிடம், "கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?" என்று கூறப்போகும் (மத். 7:22) அக்கிரமக்காரரை அறிந்திருக்கவில்லை என்று மறுதலிப்பார்.*

*அற்புதங்கள் நிகழ்த்தும் வல்லமை முதலில் அளிக்கப்பட வேண்டியிருந்தது; பின்பு இயேசுவின் நாமத்தில் கேட்டுக்கொள்வதினால், விசுவாசத்தின் மூலமாக அற்புதம் ஒன்று நிகழ்த்தப்பட முடிந்தது. இதற்கு ஒரு உதாரணம் அப். 3:1-16ல் காணப்படுகிறது. ஆவியானவர் வந்திறங்கிய போது (அப். 1:8; 2:4) வல்லமையைப் பெற்றிருந்த பேதுருவும் யோவானும் சப்பாணியாயிருந்த மனிதனை, இயேசுவின் நாமத்தில் மற்றும் தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்தின் மூலம் (வச. 16) குணமாக்கினர் (வச. 6). விசுவாசத்தினால் மாத்திரமோ அல்லது இயேசுவின் நாமத்தில் கேட்டலினால் மாத்திரமோ அற்புதங்கள் நிகழ்த்தப்படவில்லை. வல்லமை அளிக்கப்பட வேண்டியதாயிருந்தது; பின்பு இயேசுவின் நாமத்தின் மீதான விசுவாசத்தினால் ஒரு அற்புதம் நிகழ்த்தப்பட முடிவதாயிருந்தது.*

## அற்புதங்கள் பணத்திற்காக நிகழ்த்தப்படவில்லை

*சப்பாணியாயிருந்த பிச்சைக்காரரிடத்தில் பேதுரு, "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை" என்று கூறினார் (அப். 3:6அ). இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு, "வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள், இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள்" என்று அறிவுறுத்தியிருந்தார் (மத். 10:8). பவுல், தாம் அடிக்கடி "பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும்" ஊழியப்பணியாற்றியதாக எழுதினார் (2 கொரி. 11:27). இயேசு, "நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்று கூறினார் (லூக். 9:58).*

*அற்புத வல்லமைகளைப் பெற்றிருந்தவர்கள் அவற்றை, பணரீதியான பயன்களைப் பெற்றுக்கொள்ளும்படி பயன்படுத்தவில்லை. அவர்கள் விலையின்றிப் பெற்றுக்கொண்டபடியால் விலையின்றிக்கொடுக்க வேண்டும் என்று இயேசு உரைத்தார். இன்றைய நாட்களில் அற்புதங்கள் செய்யும் ஊழியக்காரர்கள் என்று உரிமைகோரிக்கொள்பவர்கள்,*

ஏராளமான பணத்தைப் பெற்றுக்கொள்பவர்களாகவும், தாங்கள் யாரிடமிருந்து பணம் பெற்றுக்கொள்கின்றார்களோ, அந்த ஏழை மக்களைவிட மிகவும் அதிக ஆடம்பரமாக வாழ்கின்றவர்களாகவும் இருக்கின்றனர். தாங்கள் செய்த அற்புதங்களில் இருந்து மாபெரும் அளவில் நிதிப்பயன் அடைந்திராத இயேசு, பவுல், பேதுரு மற்றும் தொடக்காலக் கிறிஸ்தவர்கள் ஆகியோரை இவர்கள் பின்பற்றுவதில்லை.

## அற்புதங்கள் என்பவை "எல்லாரையும் குணமாக்குவதாக" இருந்ததில்லை

இயேசு மருத்துவர்களின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார், இது மருந்துகளைப் பயன்படுத்துதலை அவர் அங்கீகரித்தார் என்பதை மறைமுகமாய் உணர்த்துவதாக இருக்கும். அவர், "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டிய தில்லை" என்று உரைத்தார் (மத். 9:12; மாற். 2:17; லூக். 5:31). லூக்கா ஒரு வைத்தியராக இருந்தார். அவரைப் பவுல் மறைமுகமாய்க் குறிப்பிட்ட போது, அவர் (லூக்கா) ஒரு வைத்தியராயிருந்தார் என்று அல்ல, ஆனால் அவரை "பிரியமான வைத்தியனாகிய லூக்கா" என்று குறிப்பிட்டார் (கொலோ. 4:14), இது அவர் (லூக்கா) கிறிஸ்தவரான பின்பும் தொடர்ந்து வைத்தியராக இருந்தார் என்பதற்குச் சுட்டிக்காண்பித்தலாக உள்ளது.

பவுல் தீமோத்தேயுவுக்கு, "நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்" (1 தீமோ. 5:23) என்று எழுதியபோது, மருந்து பயன்படுத்துதலை அவர் (பவுல்) மதித்து குறிப்பிட்டார். பவுல் திராட்சரசத்தை ஒரு குடிவகையாக அல்ல, ஆனால் தீமோத்தேயுவின் வயிற்று நோவு மற்றும் பிற பலவீனங்கள் ஆகியவற்றிற்காக ஒரு மருந்து போல் பயன்படுத்துமாறு ஆலோசனையளித்தார்.

பவுல் தமது உடன் ஊழியக்காரர்களைக் குணமாக்கியிருந்ததில்லை என்ற உண்மையானது, குணமாக்குதல் என்பது நோயாளிகளுக்குப் பயன்படுதல் மாத்திரமன்றி இன்னொரு நோக்கமும் கொண்டிருந்தது என்பதற்குச் சுட்டிக்காண்பித்தலாக உள்ளது. பவுல், "துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன்" என்று எழுதினுர் (2 தீமோ. 4:20ஆ). பவுல் தமது "சரீரத்தில் இருந்த முள்" (2 கொரி. 12:7, 8) குணமாக்கப் பெறாதிருந்தார்.

மேற்கண்ட கூற்றுக்களில் இருந்து பின்வரும் உற்றுக் கவனித்தல்கள் ஏற்படுத்த முடியும்: (1) வியாதியுள்ள மக்கள் மருத்துவர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். (2) பவுல், அப்போஸ்தலர்களுக்குள்ள வல்லமையைப் பெற்றிருந்து, மக்களைக் குணமாக்கியிருந்தும் (அப். 14:9, 10; 19:11, 12), அவர் தீமோத்தேயுவையோ அல்லது துரோப்பீமுவையோ குணமாக்கவில்லை. (3) தீமோத்தேயுவுக்கு மருந்து பரிந்துரைக்கப்பட்டது, எனவே இன்றைய நாட்களில் நமது வியாதிகளைக் குணமாக்க உதவுவதற்கும் அது (மருந்து) பயன்படுத்தப்பட வேண்டும். (4) தீமோத்தேயு

*மற்றும் துரோப்பீமு ஆகியோரைக் குணமாக்குமளவுக்குப் போதுமான விசுவாசம் பவுலிடம் இல்லாதிருந்திருக்க வேண்டும், குணமாக்கப்படுமளவுக்கு அவர்களிடத்தில் போதுமான விசுவாசம் இல்லாதிருக்க வேண்டும் அல்லது குணமாக்குதல் என்பது நோய்வாய்ப்பட்ட எல்லா மக்களின் பயன்பாட்டிற்காக இல்லாதிருந்திருக்க வேண்டும். நாம் பவுலின் விசுவாசத்தின்மீது சந்தேகம் கொள்ளமாட்டோம் மற்றும் ஒருவேளை, தீமோத்தேயு (2 தீமோ. 1:5) அல்லது துரோப்பீமு ஆகியோரின் விசுவாசத்தின் மீது கேள்வியெழுப்பக்கூடாது. (5) தீமோத்தேயுவுக்கு குணப்படுவதற்கு, விசுவாசத்தையும் ஜெபத்தையும் அல்ல ஆனால் நோய்நீக்கும் வழிமுறையாக மருந்தையே பவுல் பரிந்துரைத்தார். விசுவாசம் மாத்திரம் குணம் அளிக்கக் கூடுமென்றால், பவுல் தீமோத்தேயுவுக்குத் தவறான அறிவுரை கொடுத்தார் என்றாகிவிடும். (6) தீமோத்தேயுவையும் துரோப்பீமுவையும், பவுல் குணமாக்கியிருக்க முடிந்தும் குணமாக்கவில்லை என்றால், அவர்களுக்கு அவர் மாபெரும் அநியாயம் செய்தார் என்றாகிறது.*

*(7) குணமாக்குதல் என்பது அவிசுவாசிகளை ஈர்ப்பதற்கோ அல்லது செய்தியானது தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை உறுதிப்படுத்துவதற்கோ அவசியமாயிருந்தபோது மாத்திரமே, ஒரு அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது. (8) பவுலின் போதனை தேவனிடமிருந்து வந்தது என்பதைத் தீமோத்தேயுவும் துரோப்பீமுவும் அறிந்திருந்தனர். எனவே அந்த உண்மைக்கு நிரூபணம் எதுவும் தேவைப்படாதிருந்தது. (9) எழுதப்பட்டுள்ள வசனங்கள் நமக்குத் தேவையான அத்தாட்சிகளைக் கொடுக்கின்றன (யோவா. 20:30, 31), ஆகவே, தேவன் வேறு அத்தாட்சிகளை நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்க மாட்டார். உதாரணமாக, மோசே மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோரைத் தவிர வேறு எந்த ஆதாரமும் ஐசுவரியவானுக்குக் கொடுக்கப்படாதிருந்தது (லூக். 16:29-31). (10) இன்றைய நாட்களில் நாம் வியாதிப்படும்போது, அதிலிருந்து மீள்வதற்கு நமக்குள்ள வழிமுறைகள் எவையோ அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் அற்புதங்களுக்காக அல்ல ஆனால் உதவிக்காகவே ஜெபிக்க வேண்டும்.*

## முடிவுரை

*பரிசுத்த ஆவியானவரின் கிரியை மூலமான அடையாளங்களும் பலத்த செய்கைகளும், அவற்றைக் கண்டவர்களுக்கு, தேவன் தேவனாக இருக்கின்றார் மற்றும் அவர் தமது வசனத்தின் மூலமாகத் தம்மை நமக்கு வெளிப்படுத்தினார் என்று நிரூபிக்க முக்கியத்துவம் வாய்ந்தவைகளாயிருந்தன. இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்குள் நேரடியாக கிரியை செய்வதற்கோ அல்லது அற்புதமாகக் கிரியை செய்வதற்கோ அவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுவதில்லை. இந்தக் கிரியையானது, அப்போஸ்தலர் ஒருவரின் கரங்கள் வைக்கப்பட்டதால் ஆவியானவரின் வரத்தைப் பெற்றிருந்தவர்களில் கடைசி மனிதர் மரித்தபோது நிறுத்தப்பட்டுவிட்டது.*

*போதகர்கள், அற்புதங்களாய் தோன்றுபவற்றின்படியல்ல, ஆனால் அவர்கள் போதனையினாலேயே நியாயந்தீர்க்கப்பட வேண்டும். நாம் மனிதர்களுக்குள் இருக்கும் ஆவிகளை (1 யோவா. 4:1), அவர்கள் செய்வதாக உரிமைகோரும் அற்புதங்கள் மற்றும் பலத்த செய்கைகளை அல்ல, ஆனால் மதிப்பிடுவதற்குத் தேவன் நமக்குக் கொடுத்துள்ள தர அளவையைக்கொண்டு அவர்களின் போதனையையே சோதித்தறிய வேண்டும்: "அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையால் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும். நாங்கள் தேவனால் உண்டானவர்கள். தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான். தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை. இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்" (1 யோவா. 4:5, 6).*

---

*குறிப்புகள்*

[1]J. W. McGarvey, *New Commentary on Acts of Apostles,* vol. 1 (N.p., 1892; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 142. [2]*கொர்நேலியுவையும் அவனது வீட்டாரையும் பற்றிய கலந்துரையாடலுக்கு, "பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம்" என்ற பாடத்தில் காணவும்.* [3]J. W. McGarvey, *Matthew and Mark,* The New Testament Commentary, vol. 1 (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 375.